# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு - 2024

**பேச்சுப் போட்டி: வகுப்பு - முதுமழலை (SK) (2018-இல் பிறந்தோர்)**

## நாம் தமிழர்!

நாம் தமிழர். எமது தாய் மொழி தமிழ். தமிழ் மொழி எமது அடையாளம். எங்கள் தாய் மண் தமிழீழமும், தமிழ் நாடும் ஆகும். தமிழினம் தமிழால் பெருமை பெற்ற இனமாகும். உலகில் வாழும் தொன்மையான மொழிகளுள் தமிழும் ஒன்று.

இன்று உலகின் பல நாடுகளிலும் தமிழர் வாழ்கிறார்கள். தமிழர் பெருமை உலகெங்கும் பேசப்படுகிறது.

"தமிழன் என்றோர் இனமுண்டு
தனியே அவர்க்கொரு குணமுண்டு
அமிழ்தம் அவனுடை மொழியாகும்
அன்பே அவனுடை வழியாகும்" என்றார் நாமக்கல் கவிஞர்.

தமிழர் தமக்கென ஒரு தனிப் பண்பாட்டைக் கொண்டவர்கள். இதனை "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற பாடல் வரி எடுத்துக் காட்டுகிறது.

தமிழில் திருவள்ளுவர் எழுதிய திருக்குறள் உலகப் பொதுமறையாக உள்ளது.

நாம் கனடாவில் வசிக்கிறோம். ஆங்கிலத்தில் கல்வி கற்கிறோம். தமிழை இரண்டாவது மொழியாகப் பாடசாலையிலும், வீட்டிலும் கற்கிறோம். தாய்மொழிக் கல்வி அவசியம் என்பதை நாம் உணர வேண்டும்.

தமிழ் எங்கள் வீட்டு மொழி. உறவினர்களுடனும் நண்பர்களுடனும் தமிழில் பேசி உறவாடுவோம்.

தமிழ் பேசத் தெரிந்த தமிழராக வாழ்வோம்.

வாழ்க தமிழ்!

நன்றி. வணக்கம்!